**இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழு**

**தேசிய புத்தாக்கங்களுக்கான சனாதிபதி விருதுகள் வழங்கல் - வருடம் 2024/2025**

# விண்ணப்பங்கள் கோரல்

**பொதுத் தகவல், அறிவுறுத்தல்கள், விதிகள் மற்றும் வழிகாட்டி**

## பொதுத் தகவல்

இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவானது, 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநர்களை ஊக்குவித்தல் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நியதிச்சட்டரீதியான நிறுவனமாகும்.

01. இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவை நிறுவியதன் நோக்கத்திற்கு அமைய, இலங்கை புத்தாக்குநர்களுக்கு அவர்களது புத்தாக்கங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப, நிதி மற்றும் சட்ட உதவிகளை வழங்கி, அந்தப் புத்தாக்கங்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கான ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

    செயல்படுத்துவதுடன், புத்தாக்கங்களுக்கான சனாதிபதி விருதுகளை வழங்குவதும் அவற்றுள் முதன்மை பெற்ற ஒரு திட்டமாகும்.

02. இலங்கை புத்தாக்குநர்களை ஊக்குவித்தல் சட்டத்தின் 11(இ) அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, இலங்கையில் ஆக்கவுரிமை (Patent) பெற்றுள்ள இலங்கை புத்தாக்குநர்களுக்காக இப்போட்டி திறக்கப்பட்டுள்ளது.

03. போட்டிக்குரிய தொழில்நுட்பத் துறைகளின் கீழ், இலங்கை புத்தாக்குநர்கள் தனிநபராக, குழுவாக அல்லது நிறுவனமாகத் தங்களது புத்தாக்கங்களை இந்த சனாதிபதி விருதுப் போட்டிக்காக சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கப்படுவதுடன், விண்ணப்பம் கோரப்படும் வருடத்தின் ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 வரை தேசிய ஆக்கவுரிமைப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட இலங்கை புத்தாக்குநர்கள், இவ்வாறு அந்தந்த வருடங்களின் சனாதிபதி விருதுப் போட்டிக்கு விண்ணப்பிக்க தகுதி பெறுவர்.

04. இலங்கை குடியரசின் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நடுவர் குழுவொன்றின் மூலம், அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் புத்தாக்கங்கள் சனாதிபதி விருது வழங்குவதற்காக நடுவர் தீர்ப்புக்கு உட்படுத்தப்படும். நடுவர் குழுவினால் ஒவ்வொரு தொழில்நுட்பத் துறைக்கும் பொருத்தமான சிறந்த புத்தாக்கம் (அல்லது துறையினுள் சம புள்ளிகளைப் பெற்றுள்ள போது அந்த புத்தாக்கங்கள்) தெரிவு செய்யப்படுவதுடன், அதற்காக ஒரு சான்றிதழ் அல்லது சான்றிதழுடன் கூடிய பணப் பரிசு, காலத்திற்குப் பொருத்தமான அரசாங்க தீர்மானங்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைய உரித்தாகும். அந்தந்தத் துறைகளில் தெரிவு செய்யப்படும் சிறந்த புத்தாக்கங்களுள் மிக உயர்ந்த சாத்தியம் கொண்ட புத்தாக்கத்திற்கு, அந்த வருடத்தின் மிகச்சிறந்த புத்தாக்கத்திற்கான சனாதிபதி விருது வழங்கப்படும். தொழில்நுட்பத் துறை மதிப்பீட்டுச் சந்தர்ப்பத்தில் இருந்து வருடத்தின் மிகச்சிறந்த புத்தாக்கத்தைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம் வரை, ஒரு புத்தாக்கம் உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்யாதவிடத்து, மேற் குறிப்பிட்ட வெற்றிகளுக்கான விருதுகள் வழங்கப்பட மாட்டாது.

## பொது அறிவுறுத்தல்கள், விதிகள் மற்றும் வழிகாட்டிகள்

1) இலங்கை தேசிய புலமைச் சொத்துரிமை அலுவலகத்தினால் 2024 மற்றும் 2025 ஆம் வருடங்களுக்கு அமைய வழங்கப்பட்ட இலங்கை ஆக்கவுரிமைப் பத்திரத்தைக் கொண்டுள்ள அனைத்து இலங்கை புத்தாக்குநர்களுக்கும் இப்போட்டி திறக்கப்பட்டுள்ளது.

2) போட்டியில் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் புலமைச் சொத்துரிமைப் காப்புப் பெறப்பட்டிருந்த போதிலும், இந்த புத்தாக்கங்களின் தொழில்நுட்பங்கள் வேறு தரப்பினருக்கு வெளிப்படுத்தப்படுவது சம்பந்தமாக இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழு பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறது.

3) போட்டியில் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் புலமைச் சொத்துரிமைப் காப்புப் பெறப்பட்டிருந்த போதிலும், இந்த புத்தாக்கங்களின் தொழில்நுட்பங்கள் வேறு தரப்பினருக்கு வெளிப்படுத்தப்படுவது சம்பந்தமாக இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழு பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறது.

4) அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டிகளை நன்றாக வாசித்துத் தெரிந்துகொண்டு, அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி, போட்டிக்குத் தகுதியுடைய புத்தாக்குநர்கள் மாத்திரம் தங்களின் விண்ணப்பங்களைத் தாங்களாகவே சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5) விண்ணப்பதாரர்கள் தனிநபராக, குழுவாக அல்லது நிறுவனமாகப் போட்டியில் பங்கெடுப்பதற்காக விண்ணப்பிக்க முடியும் ஒரு குழுவிற்காக ஆக்கவுரிமைப் பத்திரம் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில், ஆக்கவுரிமைப் பத்திரத்தில் முதலாவதாகக் <u>குறிப்பிடப்பட்டுள்ள புத்தாக்குநரின் பெயர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன், ஏனைய உறுப்பினர்களின் பெயர்கள் தனியானதொரு இணைப்பாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.</u>

6) ஒரு புத்தாக்கத்திற்கு ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், குழுப் புத்தாக்கத்தின் போதும் அக்குழுவின் ஒரு உறுப்பினர் மாத்திரம் ஏனைய உறுப்பினர்களின் தகவல்களையும் உள்ளடக்கி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7) ஒரு புத்தாக்கத்திற்கு மேல் அதிக எண்ணிக்கையிலான புத்தாக்கங்களைச் சமர்ப்பிக்கும் புத்தாக்குநர்கள், அந்த ஒவ்வொரு புத்தாக்கத்திற்கும் தனித்தனியாக விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

8) விண்ணப்பதாரர்கள் தங்களது புத்தாக்கக் கருத்தாக்கத்தைப் போதுமான அளவு இயக்கிப் காண்பிப்பதற்காக, குறைந்தபட்சம் புத்தாக்கத்தின் மாதிரி வடிவத்தை அல்லது ஒரு இயங்கு மாதிரியை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு மாதிரி வடிவத்தையோ அல்லது இயங்கு மாதிரியையோ சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பங்களில், புத்தாக்கத்திற்குரிய வரைபடங்களை உள்ளடக்கிய விரிவான அறிக்கை அல்லது காணொளிக் காட்சிகள்/புகைப்படங்களை நடுவர் தீர்ப்புக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

9) புத்தாக்கம் பற்றிய விபரங்களைக் கொண்ட புகைப்படங்கள்/வரைபடங்கள் உள்ளடங்கிய தெளிவான விபரமொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பிப்பதற்குப் புத்தாக்குநர் வகைசெய்துகொள்ள வேண்டும்.
கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கி அந்த விபரம் தயாரிக்கப்பட வேண்டும்.

a) புத்தாக்கம் பற்றிய யோசனையும் அதனை மேம்படுத்துவதற்குக் காரணமான விடயங்களும்
b) புத்தாக்கத்தை இயக்கும் விதம்
c) பிரயோகப் பயன்பாடு / பயனுள்ள தன்மை
d) புத்தாக்கத்தின் இறுதி உற்பத்தியைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள் (தேசிய அல்லது வெளிநாட்டுச் சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவை)
e) உற்பத்திச் செலவு
f) புத்தாக்கத்தின் வர்த்தக சாத்தியக்கூறு, சந்தைத்தேவை... முதலியன
g) புத்தாக்கத்திற்கு அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகள்/ கொள்கைகள் *

* *புத்தாக்கத்தை மேம்படுத்தும் போது புதிய கோட்பாடுகள்/கொள்கைகளை விண்ணப்பதாரர் அறிமுகப்படுத்துவாராயின், அந்த கோட்பாடுகளின் பிரயோகப் பயன்பாட்டை நடுவர் குழுவின் முன்னிலையில் உறுதிப்படுத்த விண்ணப்பதாரர் சமர்த்தாக இருக்க வேண்டும். அவ்வாறில்லை எனில், அந்த கோட்பாடுகளின் பிரயோகப் பயன்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.*

*அதேபோன்று விண்ணப்பதாரரின் புத்தாக்கமானது மருத்துவ உற்பத்தியொன்றாக இருந்தால் (தேசிய அல்லது மேற்கத்திய), அந்த உற்பத்திகளின் வெற்றியை மருத்துவ ரீதியாக உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறில்லை எனில், அதனை மனித சமூகத்திற்காக வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்தி, ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ நிறுவனமொன்றிலிருந்து போதுமான, நிரூபிக்கக்கூடிய தரவுகளை உள்ளடக்கிய சான்றிதழொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.*

**கவனிக்கவும்:**

- **விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணத்தினதும் மூலப்பிரதிகளை இணைத்து அனுப்பக் கூடாது என்பதுடன், நேர்முகப்பரீட்சை நடைபெறும் நாளில் நடுவர் குழுவிடம் அந்த மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.**

- **புத்தாக்கம் தொடர்பான அனைத்துத் தகவல்கள், ஆவணங்கள் முதலியன நடுவர் தீர்ப்பு நடைபெறும் அன்றைய தினமே அந்த நடுவர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் வழங்கப்படும் தகவல்கள் எவையும் நடுவர் தீர்ப்பிற்காகக் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.**

10) அந்தந்த வருடத்திற்குரிய சனாதிபதி விருதுப் போட்டிக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள், அந்த குறிப்பிட்ட வருடத்தின் ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இலங்கை புலமைச்சொத்துரிமை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ஆக்கவுரிமைப் பத்திரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

11) விண்ணப்பதாரர்கள் சனாதிபதி விருதுப் போட்டிக்காக வெளியிடப்படும் இந்தப் பொது அறிவுறுத்தல்கள், விதிகள், நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டி கையேட்டை மிக நன்றாக வாசித்துப் புரிந்துகொண்டு, இந்தத் திட்டத்தினுள் அவற்றிற்கு கட்டுப்படுவதற்கு உடன்பட வேண்டும்.

12) சரியாகப் பூர்த்தி செய்து கையொப்பமிடுவதன் மூலம், போட்டியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்ட போட்டியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை, விண்ணப்பம் கோரப்படும் இறுதி நாளன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்குப் **பதிவுத் தபாலில்** அனுப்ப வேண்டும்.

**விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி** நாள் **2026** ஆகஸ்ட் **31** ஆகும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

13) நிறுவனமொன்றின் பெயருக்கு புலமைச் சொத்துரிமை அலுவலகத்தினால் ஆக்கவுரிமைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், சனாதிபதி விருதுப் போட்டிக்கு விண்ணப்பித்திருப்பது புத்தாக்குநராக இருந்தால், அந்த விண்ணப்பதாரரின் பெயர் ஆக்கவுரிமைப் பத்திரத்தில் புத்தாக்குநரின் பெயர் குறிப்பிட்டுள்ள இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அந்த புத்தாக்கம் வெற்றியொன்றைப் பெற்றுக்கொண்டால், அந்த வெற்றிக்குரிய சான்றிதழ்கள், கேடயங்கள் மற்றும் பரிசுப் பணம் **புத்தாக்குநரின் பெயருக்கு வழங்கப்படும்**.

14) சனாதிபதி விருதுப் போட்டிக்கான புத்தாக்கங்களை மதிப்பீடு செய்யும் செயல்முறையின் இறுதி முடிவு நடுவர் குழுவிற்குரியது என்பதுடன், ஏனைய அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பிலான இறுதி முடிவு ஆணைக்குழுவிற்குரியதாகும்.

15) போட்டியில் பங்கெடுப்பதற்காக விண்ணப்பங்களை அனுப்பக்கூடிய தொழில்நுட்பத் துறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. பொதுப் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் தேசிய பாதுகாப்பு
2. இரசாயனவியல்
3. உணவுத் தொழில்நுட்பம்
4. மருத்துவவியல் மற்றும் ஔடதவியல்
5. பாரம்பரிய மருத்துவவியல்
6. பொதுக் கைத்தொழில் மற்றும் உட்கட்டமைப்பு
7. பௌதிகவியல்
8. தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
9. விவசாயம்
10. பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்
11. வலுச்சக்தி
12. சூழல் பாதுகாப்பு
13. போக்குவரத்து
14. பொறியியல்

மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பத் துறைகள், போட்டியின் முறையான செயல்பாட்டுத் தேவைகள் உட்பட வர்த்தகமயமாக்கல் மூலங்களைக் கொண்ட குறிப்பிட்ட புத்தாக்கங்களைத் தெரிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும்.

16) போட்டியாளர்கள் போட்டியின் முன்னரோ அல்லது பின்னரோ போட்டித் தீர்ப்புகள் சம்பந்தமாக நடுவர் குழுவுடன் தொடர்புகொள்ள எடுக்கும் எந்தவொரு முயற்சியும், போட்டியில் தகுதியற்றவராகக் கருதப்பட்டு குறித்த போட்டியிலிருந்து நீக்கப்படுவதற்கு பலத்த காரணமாக அமையும்.

## பொதுவான விடயங்கள்

புத்தாக்கத்திற்குரிய பின்னணி விபரங்கள் அனைத்தையும் வரிசைக்கிரமமாக எழுதி வைப்பதன் மூலம் உங்களால் ஏதேனும் முக்கிய விடயங்கள் விடுபடுவதைத் தவிர்க்க முடியும். உங்களிடம் ஏதேனும் எழுத்துப்பூர்வமான சான்றுகள் இருந்தால் அவற்றை தெளிவாகக் குறித்துக்கொண்டு எடுத்து வருவதன் மூலம், மிகவும் முறையானதாகவும் சரியானதாகவும் நடுவர் குழுவிடம் விபரங்களைச் சமர்ப்பிப்பதற்கு அது துணையாக இருக்கும்.

சில சந்தர்ப்பங்களில் நடுவர் குழுவினால் முன்வைக்கப்படும் கேள்விகள் நியாயமற்றதாகவும் கடுமையானதாகவும் உங்களுக்குத் தோன்றலாம். எனினும், அக்கேள்விகள் உங்களால் அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கும் கேள்விகளாகும். போட்டி சம்பந்தமாக அவர்கள் மிகவும் சரியானதொரு முடிவை எடுப்பதற்கு அது அவசியமாக இருப்பதனாலேயே அவ்வாறு நடக்கிறது.

நேர்முகப்பரீட்சைக்காக வழங்கப்பட்டுள்ள நேரத்திற்கு குறைந்தபட்சம் 10 நிமிடங்களுக்கு முன்னராவது குறித்த இடத்திற்கு வந்திருப்பது அவசியமாகும். புத்தாக்கத்தின் செயல்பாடுகள் உள்ளடங்கிய காணொளிகள் அல்லது புத்தாக்கத்தை இயக்குவதற்குத் தேவையான பின்னணியை ஆயத்தம் செய்து கொள்வதற்கு இந்த நேரம் உங்களுக்கு உதவும்.

ஒவ்வொரு தொழில்நுட்பத் துறைகளிலும் குறிப்பிட்ட வெற்றிகளைத் தெரிவு செய்யும் போது, புதிய உருவாக்கத்தின் வர்த்தகமயமாக்கல் பின்னணி அல்லது சமூக நன்மைகளுக்காகப் பயன்பாட்டில் கொள்வதை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்கங்களுக்கு முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதனை உறுதிப்படுத்துவதற்காக முறையான ஆவணங்கள் அல்லது தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**மேலும் நடுவர் தீர்ப்பு மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகள் சம்பந்தமாக ஏதேனும் பிரச்சினை இருக்குமாயின், அந்த சந்தர்ப்பத்திலேயே அது பற்றி இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழு எவ்விதத்திலும் தலையிடாது என்பதைப் புரிந்துணர்வோடு செயல்பட வேண்டும்.**

## விசேட விடயங்கள்

மேற்குறிப்பிட்ட விடயங்கள் குறித்து ஒரு போட்டியாளராக நீங்கள் காட்டும் அலட்சியம், விளக்கமின்மை அல்லது தவறான விளக்கம் மற்றும் ஏதேனும் ஒரு செயற்பாட்டை நிறைவேற்றுவதில் உங்களது தோல்வியின் காரணமாக நடுவர் குழுவிடமிருந்து அல்லது ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கும் இறுதிப் போட்டி முடிவுகள் அல்லது போட்டியிலிருந்து நீக்க வேண்டிய சூழ்நிலைகளால் ஏற்படும் அனைத்து அசௌகரியங்களுக்கும் ஆணைக்குழு எவ்விதத்திலும் பொறுப்பேற்காது என்பதுடன், போட்டியாளர்கள் அந்த நிலையைத் தாங்கிக்கொள்ள வேண்டும்.

★ கண்டுபிடிப்புகளை மதிப்பீடு செய்து தீர்மானிக்கும் பொறுப்பு தீர்ப்பாயக் குழுவிற்கு (நடுவர்கள் குழு) வழங்கப்பட்டுள்ளது. அந்தக் குழு, கண்டுபிடிப்பின் புதுமைத்தன்மை, தொழில்நுட்பத் திறன், பயன்பாட்டு மதிப்பு, பொருளாதாரப் பயன், சமூக நன்மை மற்றும் சுற்றுச்சூழலுக்கான தாக்கம் போன்ற அம்சங்களை ஆராய்ந்து மதிப்பெண்களை வழங்கும். அதன் அடிப்படையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

<u>முக்கிய சொற்களின் வரைவிலக்கணங்கள்</u>

a) **புத்தாக்கம்** - புத்தாக்கம் என்பது தனித்துவமான ஒரு புதிய உபகரணம், செய்முறை, சேர்வை அல்லது செயல்முறையாகும். புத்தாக்க செயல்முறையானது, முழுமையாகப் பொறியியல் மற்றும் தயாரிப்பு மேம்பாடுகளை உள்ளடக்கிய ஒரு செயல்முறையாகும். இது ஒரு இயந்திரத்தின் மீது அல்லது தயாரிப்பின மீது மேற்கொள்ளப்படும் மேம்பாடாக அல்லது ஏதேனும் ஒரு பொருள் அல்லது விளைவை உருவாக்கும் செயல்முறையாக இருக்கலாம். முழுமையாகத் தனித்துவமான ஒரு செயற்பாட்டை அல்லது விளைவை எட்டும் புத்தாக்கங்கள், நிலவும் தொழில்நுட்பங்களில் ஒரு தீவிர மாற்றத்தை ஏற்படுத்தும்.

b) **புதுமைப்படுத்தல்** - காணப்படும் ஒரு புத்தாக்கத்தை மேம்படுத்தி சந்தைக்குப் பொருத்தமான நிலைக்குத் தயாரிக்கப்பட்ட ஒரு பொருள் புதுமைப்படுத்தலாகும். இதுவும் ஒரு புத்தாக்கத்தின் அடிப்படை அம்சங்களான புத்தாக்கப் படிகள், தொழிற்துறை ரீதியாகப் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல் மற்றும் மனிதனுக்குப் பயனுள்ள தன்மையைக் கொண்ட ஒரு தயாரிப்பாகும்.

c) மூல முன் மாதிரி - புத்தாக்கக் கருத்தாக்கத்தை பௌதிக ரீதியாக முன்வைப்பதற்காக முதலாவதாகக் கட்டமைக்கப்பட்ட முழு அளவிலான இயங்கு அமைப்பானது, மூல முன் மாதிரி வடிவம் என அழைக்கப்படும். ஒரு புத்தாக்கத்தின் முதலாவது உற்பத்தி இதுவாகும்.

d) **இயங்கு மாதிரி** - வெறும் புத்தாக்கத்தின் செயல்முறையை மாதிரியாகக் காண்பிப்பதற்காக, அதன் உண்மை அளவை விடச் சிறிய அளவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாதிரி வடிவத்தை இயங்கு மாதிரி என அழைக்க முடியும்.

e) **ஆக்கவுரிமைப் பத்திரம்** - ஒரு புத்தாக்கத்தை வேறொருவர் உற்பத்தி செய்வதை, பயன்படுத்துவதை அல்லது விற்பனை செய்வதைத் தடுத்து, அதன் உரிமையாளருக்கு மாத்திரம் அந்த உரிமையை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வழங்கி அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஒரு சட்டப்பூர்வ ஆவணமாகும்.

❖ சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"புத்தாக்கங்களுக்கான சனாதிபதி விருதுகள் - ....."** (வெற்றிடத்தில் உரிய வருடத்தைக் குறிப்பிட வேண்டும்) எனக் குறிப்பிடுவது அவசியமாகும்.

பணிப்பாளர்,
இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழு,
05 ஆம் மாடி, "மெஹெவர பியெச" கட்டிடம்,
நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05.

தொலைபேசி இலக்கம் : 011-2676649
மின்னஞ்சல் : presidentialawards.slic@gmail.com    இணையதளம் : www.slic.gov.lk